**<u>அரச சேவையிலும் அரச கூட்டுத்தாபனங்களிலும் பதவிகளுக்கு நியமிக்கப்படும்/பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆட்களின் தகுதியை ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு</u>**

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழுவினால் பின்வரும் பதவிகளுக்கு பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளவர்களின் தகுதி ஆராயப்பட உள்ளது: -

| | பெயர் மற்றும் முகவரி | பதவி |
|---|---|---|
| 1 | திரு. தர்ஷன மஹெந்திர பெரேரா<br>இல.48, டி. வோஸ் அவென்யூ, கொழும்பு 04 | மலேசியாவிற்கான இலங்கையின் உயர் ஸ்தானிகராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் |
| 2 | திரு. தஸநாயக்க முதியன்ஸேலாகே சுமித் பிரியந்த தஸநாயக்க<br>இல.52, 2ஆம் ஒழுங்கை, ரத்மலான | சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் தூதுவராக மற்றும் நிரந்தர பிரதிநிதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் |
| 3 | திருமதி. தயானி மெண்டிஸ்<br>இல.46A, ஸ்ரீ ஞானேந்திர மாவத்தை, ரத்மலான | ஆஸ்திரியக் குடியரசுக்கான இலங்கையின் தூதுவராக மற்றும் நிரந்தர பிரதிநிதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் |
| 4 | திரு. சமந்த பிரியதர்ஷன வீரசிங்க பதிரண<br>இல. 284/3, திமுது மாவத்தை, ஹோகந்தர தெற்கு. | ருமேனியாவிற்கான இலங்கையின் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் |

மேற்படி பெயர்குறித்த நியமனங்கள் தொடர்பாக கருத்துக்கூற ஏதேனும் அமைப்பு அல்லது எவரேனும் தனிநபர் விரும்பினால், முறையாக கையொப்பமிடப்பட்ட எழுத்துமூலமான சமர்ப்பிப்புகளை "**செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழு அலுவலகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**" என்ற முகவரிக்கு **<u>2025 டிசம்பர் 29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்</u>** கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். இன்றேல், 011-2777300 எனும் இலக்கத்திற்கு தொலைநகல் ஊடாகவோ அல்லது highposts_c@parliament.lk எனும் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல சமர்ப்பிப்புகளுக்கு மேலதிகமாக வாய்மூல சாட்சியங்களைச் சமர்ப்பிக்குமாறும் குழுவினால் பணிக்கப்படலாம். இவ் விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் (www.parliament.lk) உள்ளடக்கப்பட்டுள்ளது.

குழுவின் செயலாளர்
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.
2025 டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி.